# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:44** **தேதி:-07.06.2015**

## சென்னையில் தமிழ் மாநில செயற்குழு

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில செயற்குழு, சென்னையில் நமது மாநில தலைவரும், அகில இந்திய உதவி பொது செயலாளருமான தோழர் S.செல்லப்பா அவர்களின் தலைமையில் 03.06.2015 அன்று மிக சிறப்பாக நடைபெற்றது. BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் நமது சங்க கொடியினை ஏற்று வைத்தார். நமது மாநில துணைத்தலைவர் தோழர் V.வெங்கட்ராமன் அஞ்சலி உரை நிகழ்த்திய பின் மாநில செயற்குழு மறைந்த தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் தனது அஞ்சலியை செலுத்தியது. மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன் வந்திருந்த அனைத்து தோழர்களையும் வரவேற்றார்.

மாநில தலைவரின் தலைமையுரைக்கு பின் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு நீண்டதொரு துவக்க உரை நிகழ்த்தினார். நமது இந்திய நாட்டின் பொருளாதாரம் தொடர்பாகவும், மத்திய அரசு கடைபிடித்து வரும் மக்கள் விரோத, பெரு முதலாளி ஆதரவு கொள்கைகளையும், அது எவ்வாறு தேசத்திற்கு கேடு விளைவிக்கும் என்றும் விளக்கமாக எடுத்துரைத்தார். கடந்த ஆறு மாத காலமாக BSNLல் நடைபெற்று வரும் BSNL பாது காப்பு இயக்கங்கள் தொடர்பாகவும், கையெழுத்து இயக்கம், வெற்றிகரமான 2 நாட்கள் வேலை நிறுத்தம் மற்றும் அதற்கு பின் தொலை தொடர்பு இலாகாவின் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தை, அதற்கு பின் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாகவும் எடுத்துரைத்தார். இந்த போராட்டத்தை உறுதியாக நடத்தி வரும் இந்த சூழ்நிலையிலும், நாம் நமது ஊழியர்களின் தேங்கி உள்ள பிரச்சனைகளை தீர்வு காண நமது சங்கம் உறுதியாக நடத்தி வரும் இந்த சூழ்நிலையிலும், நாம் நமது ஊழியர்களின் தேங்கி உள்ள பிரச்சனைகளை தீர்வு காண நமது சங்கம் JAC மூலம் நடத்திய போராட்டங்கள், தற்போதைய நிலை ஆகியவற்றை தெளிவாக விளக்கினார். தற்போது BSNL நிர்வாகம் அறிவித்துள்ள, இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரை இலவசமாக நாடு முழுவதும் பேசிக்கொள்ளலாம் என்ற திட்டத்தையும், ஜூன்15 முதல் அறிவிக்கப்பட்டுள்ள இலவச ரோமிங் திட்டத்தையும் மக்கள் முன் பிரபலப்படுத்தும் வகையிலும், நமது வாடிக்கையாளர்களை அதிகப்படுத்தும் வகையிலும் திட்டங்களை தலமட்டங்களில் தீட்டி செயல்படுத்த விடப்பட்டுள்ள ஒரு மாத கால இயக்கத்தினை வெற்றி பெறச் செய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவரது துவக்க உரைக்கு பின் ஆய்படு பொருட்களை மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் அறிமுகப்படுத்தினார். பின்னர் நடைபெற்ற விவாதத்தில் அனைத்து மாவட்ட செயலாளர்களும், BSNL WWCC மாநில அமைப்பாளர் தோழர் V.P.இந்திரா அவர்களும், மாநில அமைப்பு செயலாளர் தோழர் M.மல்லிகா அவர்களும் கலந்துக் கொண்டனர். நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா அவர்கள் தமிழ் மாநில செயற்குழுவில் முடிவு எடுக்கப்பட வேண்டிய சில அம்சங்களுக்கு வழிகாட்டினார். தோழர்களின் சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு நிறைவுரையாற்றினார். அதற்கு பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

01) நடந்து முடிந்த கையெழுத்து இயக்கத்தில் தமிழகத்தில் இருந்து 7,22,532 கையெழுத்துக்களை மக்களிடம் இருந்து பெறுவதற்கு சிறப்பாக ஈடுபட்ட FORUM தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் தமிழ் மாநில செயற்குழு தனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது. இந்த இயக்கத்தில் தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் தமிழ் மாநில செயற்குழு தனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது. இந்த இயக்கத்தில் BSNL ஊழியர்களோடு தோளோடு தோள் நின்று

உழைத்திட்ட BSNL ஒப்பந்த ஊழியர்கள், ஓய்வூதியர்கள், AIIEA தோழர்கள், AITUC மற்றும் CITU உள்ளிட்ட அனைத்து தோழமை தொழிற்சங்க தோழர்களுக்கும் தமிழ் மாநில செயற்குழு தனது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் உரித்தாக்கிக் கொள்கிறது.

02) ஏப்ரல் 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பிரமாண்டமான வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற அனைத்து தோழர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மனமார்ந்த பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தமிழ் மாநில செயற்குழு உரித்தாக்குகிறது. குறிப்பாக 90%க்கும் மேல் பங்கேற்ற பாண்டிச்சேரி, நாகர்கோவில், நீலகிரி மற்றும் கடலூர் மாவட்ட தோழர்களுக்கு சிறப்பு பாராட்டுக்கள்.

03) அதே போல தமிழகத்தில் இந்த வேலை நிறுத்தத்தில் முழுமையாக பங்கு பெற்றுள்ள ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் தமிழ் மாநில செயற்குழு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

04) இந்த வேலை நிறுத்தத்தை சீர்குலைக்க வேண்டும் என்கின்ற நோக்கோடு செயல்பட்ட சிலர் மீது நடவடிக்கை எடுக்க தயங்கிய மாநில நிர்வாகத்திற்கு எதிராக 29.04.2015 அன்று நடைபெற்ற உண்ணாவிரத போராட்டத்தில் பங்கு பெற்ற அனைத்து தோழர்களுக்கும், குறிப்பாக சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்து சென்னை CGM(O) மாவட்ட FORUM தோழர்களுக்கும், திரளாக பங்கு பெற்ற பாண்டிச்சேரி, கடலூர் மற்றும் வேலூர் மாவட்ட தோழர்களுக்கும் இந்த மாநில செயற்குழு தனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

05) அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இணைந்து மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகளுக்கு எதிராக அறிவித்துள்ள செப்டம்பர் 2, 2015 அகில இந்திய வேலை நிறுத்த போராட்டத்திற்கு தலமட்டங்களில் தற்போது இருந்தே தயாரிப்பு பணிகளில ஈடுபட வேண்டும் என கிளை/மாவட்ட சங்கங்களை இந்த தமிழ் மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

06) ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளை முன்வைத்து 10.06.2015 அன்று சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலகம் முன் நடைபெற உள்ள தர்ணா போராட்டத்தில் சக்தியாக பங்கேற்று கோரிக்கைகளை வெற்றி பெறச்செய்ய வேண்டுமென தமிழகத்தில் உள்ள அனைத்து BSNL ஊழியர்களையும் இந்த மாநில செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

07) இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரை இலவச அழைப்புகள் திட்டத்தையும், ஜூன் 16 முதல் அறிமுகப்படுத்த இருக்கின்ற இலவச ரோமிங் திட்டத்தையும் மக்கள் மத்தியில் சிறப்பாக விளம்பரப் படுத்தி நமது வாடிக்கையாளர் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்கிற நோக்கில், அகில இந்திய FORUM அறைகூவல் விட்டுள்ள ”ஒரு மாத கால இயக்க”த்தை தமிழகத்தில் FORUM தோழர்களுடன் இணைந்து மிக வெற்றிகரமாக செயல்படுத்திட வேண்டும் என இந்த மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது.

08) மேற்கு மாவட்டங்களான நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்ட சங்கங்களின் மாவட்ட சங்க நிர்வாகிகள் மற்றும் கிளை செயலாளர்கள் பங்கேற்கும் ஒரு பயிற்சி முகாமினை செப்டம்பர் மாதத்தில் சேலத்தில் நடத்துவது என தமிழ் மாநில செயற்குழு முடிவு செய்தது.

09) அடுத்த மாநில செயற்குழுவை இரண்டு நாட்கள் செயற்குழுவாக தஞ்சையில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இறுதியில் மாநில அமைப்பு செயலாளர் தோழர் A.அண்ணாமலை நன்றி கூறி இந்த செயற்குழுவை முடித்து வைத்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**